# அம்பாறை மாவட்ட சனத்தொகை இயக்கமும் தாக்கங்களும்: 1946-2011

**M.L. Fowzul Ameer**

*Department of Geography, South Eastern University of Sri Lanka, Oluvil.*

**Keywords:** *சனத்தொகை, சனத்தொகை இயக்கம், தாக்கங்கள்*

**ஆய்வின் அறிமுகம்**

இலங்கை பல்லின சமூக அமைப்பைக் கொண்ட ஒரு நாடாகும். இங்கு சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் என்று பல்வேறு பிரதேசங்களிலும் கலந்து வாழ்ந்து வருகின்றார்கள். எந்த ஒரு நாட்டிலும் காணாத வகையில் ஒரே மொழியைப் பேசுகின்றவர்கள் பல்வேறு மதங்களைப் பின்பற்றுபவர்களாகக் காணப்படுகின்றமை மற்றொரு சிறப்பம்சமாகும். அதேபோன்று பல்வேறு மொழியினைப் பேசுகின்றவர்கள் ஒரு மதக் கொள்கையினைப் பின்பற்றுபவர்களாகவும் காணப்படுகின்றார்கள். இலங்கை முழுவதற்குமான முதலாவது சனத்தொகைக் கணிப்பீடானது 1827 ஆம் ஆண்டு பிரித்தானிய ஆட்சியாளாரான W.J. MacCarthy என்பவரால் மேற்கொள்ளப்பட்ட போது சனத்தொகையானது 889,584 ஆகக்காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து இங்கையில் மிகவும் நுண்ணியமாக விஞ்ஞானரீதியாக 1871 ஆம் ஆண்டிலிருந்து சனத்தொகைக் கணிப்பீடுகள் ஒவ்வொரு பத்து வருட இடைவெளி அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. (The Population of Sri Lanka-1974, Department of Census and Statistics, pps 1-10)

இலங்கையில் கிழக்கு மாகாணம் மிகவும் வளமிக்க ஒரு பிரதேசமாகும். இப்பிரதேசமானது 7, 55', 00" வட அகலக்கோட்டிற்கும் 81, 30', 00" கிழக்கு நெடுங்கோட்டிற்கும் இடைப்பட்ட பிரதேசமாக அமைந்து காணப்படுகின்றது. இதன் வடக்காக வட மாகாணமும், தெற்காக தென் மாகாணமும், கிழக்காக வங்காள விரிகுடாவும் மேற்காக ஊவா, மத்திய மாகாணங்களும் எல்லைகளாக உள்ளன. இப்பிரதேசத்தின் மொத்த நிலப்பரப்பு 9,996 சதுர கிலோமீற்றர் ஆகும். இதில் நிலப்பகுதி 9,361 சதுர கிலோமீற்றர். நீர்ப்பிரதேசம் 635 சதுர கிலோமீற்றா. இங்கு நிருவாக ரீதியாக மொத்தம் நாற்பத்தி ஐந்து (45) பிரதேச சபைகளும் 1085 கிராமசேவகர்கள் பிரிவும் காணப்படுகின்றன.

கிழக்கு மாகாணத்தில் முக்கியமாக மூன்று மாவட்டங்கள் காணப்படுகின்றன.

01. திருகோணமலை மவாட்டம்
02. மட்டக்களப்பு மாவட்டம்
03. அம்பாறை மாவட்டம்

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்கள் மாத்திரமே 1963 ஆம் ஆண்டிற்கு முன்னர் காணப்பட்டன. அதன் பின்னர் பெரும்பான்மை சமூகத்தினர் தங்களது சமூக நலன்களை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட எல்லைகளை மீள் அமைத்து புதிய அம்பாறை மாவட்டத்தை உருவாக்கினார்கள்.

கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக 1,643,528 சனத்தொகை காணப்படுகின்றது. மாவட்டரீதியாக சனத்தொகையினை நோக்குகின்றபோது திருகோணமலை மாவட்டத்தில் 412,548 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 579,469 பேரும் அம்பாறை மாவட்டத்தில் 651,512 பேரும் காணப்படுகின்றனர்.(Basic Population Information Ampara District -2007, Department of Censes and Statistic).

அம்பாறை மாவட்டத்தில் சனத்தொகையில் மாற்றங்கள் ஏற்படுவதற்கு சனத்தொகை கட்டமைப்பு அம்சங்களான வயது, பால், இனம், தங்கிவாழ்வோர் போன்றவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டபோது சனத்தொகை அதிகரிப்பு ஏற்பட்டது. அது மாத்திரமல்லாமல் அம்பாறை மாவட்டத்தில் சனத்தொகை இயக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் அதாவது இறப்பு, கருவளம், பிறப்பு, இடப்பெயர்வு போன்றவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் சனத்தொகை வளச்சியில் மாற்றங்களை ஏற்படுத்தின என்பதும் ஒரு முக்கியமான விடயமாகும். அதேபோன்று திட்டமிட்டு அம்பாறை மாவட்டத்தில் பெரும்பான்மை சமூகத்தினரை குடியேற்றியுள்ளார்கள் என்பது தெளிவாகின்றது.

- அம்பாறை மாவட்டத்தில் சனத்தொகை இயக்கத்தினால் ஏற்பட்ட மாற்றங்களையும் வளர்ச்சிப் போக்கினையும் இனங்கானுதல்.
- அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட மாற்றம், திட்டமிட்ட செயற்பாடுகள் ஆகியன நாட்டிலும் சமூகங்களிடையேயும் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை முன்வைப்பதுடன் அவை மீண்டும் ஏற்படாவண்ணம் இன ஒற்றுமையை வலியுறுத்தக்கூடிய அம்சங்களை முன்வைத்தல்.

**ஆய்வுமுறையியல்**
தரவுகளின் பண்புசார், அளவுசார் அம்சங்களே ஆய்வின் சிறப்புத்தன்மையினைத் தீர்மானிக்கின்றன. இவ்வாய்விற்காக முதலாம் நிலைத்தரவுகளும் இரண்டாம் நிலைத்தரவுகளும் பயன்படுத்தப்படுகின்றன.
முதலாம் நிலைத்தரவுகள்:
ஆய்வினை சிறப்பாக மேற்கொள்வதற்காக பண்புசார் அடிப்படையில் (Qualitative Research) பின்வரும் இரண்டு முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

01. நேரடியாக களத்திற்குச் சென்று அவதானித்தல் முறை - Direct Observation Method
02. மக்களோடு கலந்து நேர்காணல் முறை - Participation Interview Method

இரண்டாம் நிலைத்தரவுகள் பின்வரும் ஆவணங்களான புத்தகங்கள், தனிநபர் ஆய்வறிக்கைகள், புள்ளிவிபரவியல் திணைக்கள அறிக்கைகள், மாவட்ட கச்சேரிகளில் காணப்படுகின்ற வருடாந்த அறிக்கைகள், பிரதேச சபையினால் வெளியிடப்படுகின்ற வருடாந்த அறிக்கைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இடவிளக்கப்படங்கள், விமானப்படங்கள், செய்மதிப்படங்கள், இணையத்தள அறிக்கைகள் ஆகியவற்றிலிருந்து பெறப்படுகின்றன.

**ஆய்வின் முடிவும்,விதந்துரையும்**
எல்லாவற்றையும்கூட்டாக நோக்கும்போது பல வருடங்களாக பல அரசாங்கங்கள் மக்களால் மாற்றி அமைக்கப்பட்டாலும் அவர்கள் அனைவரும் பெரும் பான்மையைச் சோந்தவர்களாக காணப்பட்டதனால் திட்டமிட்டு அம்பாறை மாவட்டத்தில் பெரும்பான்மை சமூகத்தினரை குடியேற்றியதுடன் பல்வேறு சலுகைகளிலும் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருப்பதுடன் ஏனைய இனத்தவர்களின் நிலங்களும் சுவீகரிக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகின்றது.

## References


போ. பாலசுந்தரம்பிள்ளை, 2004, யாழ்ப்பாணப் புவியிலாளன், புவியியற் கழகம், யாழப்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம். பக்கம் 83-92

க. குகபாலன், 2005, குடித்தொகையியல் கோட்பாடுகளும் பிரயோகங்களும், கரிகணன் பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்.

க. சச்சிதானந்தன், 2007, சிங்களவர் கைப்பற்றிய தமிழர் நிலம், காந்தளகம், சென்னை, இந்தியா.

Census, 1871, Annexures to Report, Governor of Ceylon, Colombo

Champika Ranawaka, 2007, Sinhalaisation of East, The Island New Paper 20.12.2007 (www.sangam.org/2008/01/Sinhalaisation.php?uid=2700)

International Crisis Group: Asia report No 159, 2008, Sri Lanka's Eastern Province: Land, Development, and Conflict, Colombo.

Mohaideen, MIM. 2007, A Reply to Minister Campikaa Ranawaka, The Island News Paper 26 and 27 December 2007.

Nithi Nithyanandam, V., and Rukmani Gounder, 2002, Equals in Markets: Land Property Rights and Ethnicity in Fiji and Sri Lanka, 13th World Congress of International Economic History Association, Buenos Aires.

Shantha K. Hennayake, 1988, Proceeding-AAG Middle States division-Vol.21 "The Tamil Homeland: Its Political and Intellectual Origins" New York.

The Population of Sri Lanka-1974, 1974, Department of Census and Statistics, Colombo, Sri Lanka

www.statistics.gov.lk